DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **CC No. 13/2022** |
| Deposition of witness for | Prosecution **PW - 1**<br>Deffence<br>Court |

Name : **திரு.சூர்யா**

Father's/Husband's Name: **திரு.**

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.03.2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது பெல்வியூ TR பஜாரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது அங்கேயே விவசாயம் செய்து வருகின்றேன். எங்களுடைய விவசாய நிலம் TR பஜார் பெல்வியூவில் அமைந்துள்ளது. நான் அங்கு விவசாயமும் செய்து வருகின்றேன்,. அந்த நிலத்திலேயே உரிய அனுமதி பெற்று வீடு ஒன்று கட்டி வருகின்றேன்.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.13 18:14:31 +0530

2. ஏப்ரல் 13ம் தேதி 2021ம் வருடம் மாலை சுமார் 3.45 மணியளவில் வேலையாட்கள் பணி செய்து கொண்டிருந்தனர். நானும் அங்கிருந்தேன். அப்போது எதிரி ரிஷப் மற்றும் கருப்பையா என்பவரும் தார் ஜீப்பில் எனது நிலத்தினுள் அத்துமீறி உள்ளே நுழைந்தனர். என்னுடையஇடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டுகிறாயா என்று சத்தம் போட ஆரம்பித்தார். நான் அவரிடம் பேச முயற்சி செய்த போது அவர் ஆங்கிலத்தில் **" I will bring my men and chase you all away and I will kill you bloody bastard" என்றும் நான் யார் என்று நினைத்தாய் You call minister, you call police என்னை ஒன்னும் புடுங்க முடியாது"** என்று கூறினார்.

3. பின்னர் JCB–யை எடுத்து வந்து இந்த இடத்தை தரைமட்டமாக்கி விடுவேன் என்றும் மிரட்டினார். பின்னர் அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். என்னுடைய வேலையாட்கள் என்னைச் சுற்றிதான் இருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் என்னை எதிரி மிரட்டியது எனக்கு மன உளைச்சலையும், உயிர் பயத்தையும் ஏற்படுத்தியது. எதிரிக்கு ஏற்கனவே History உள்ளது. எதிரி ஏற்கனவே பல இடங்களில் இதே மாதிரியான செயல்களில் ஈடுபட்டதால் எனக்கு பயம் ஏற்பட்டது. மேலும் எதிரி என்னை சம்பவ இடத்தில் வைத்து புகைப்படங்களும் எடுத்துச் சென்றார். அதனால் எனக்கு பயம் ஏற்பட்டது. எனது வேலையாட்களுடன் பேசிவிட்டு அன்றே காவல் நிலையம் சென்று எதிரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி நடுவட்டம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.03.13
18:14:37 +0530

4. நான் புகார் அளித்த பின்பு என்னை பயமுறுத்தும் விதமாக எங்களது நிலத்திற்கு செல்லும் வழிப்பாதையில் 6 இஞ்ச் ஆணி, 50 அடி தூரத்திற்கு அடித்து வைத்திருந்தார். அதுவே சுடுகாட்டிற்கு செல்லும் பாதையாகவும் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.த.சா.ஆ.1** ஆகும்.

5. என்னை மிரட்டி எனக்கு உயிர் பயம் ஏற்படுத்திய எதிரியைப் பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும் (இன்று எதிரி ஆஜர் இல்லை). போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u> :

1. சம்பவம் இடம் எனக்கு சொந்தமான இடம் என்று சொல்வதற்கு ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கேட்கவில்லை அதனால் கொடுக்கவில்லை. எந்த வருடம் அந்த சொத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. 2018 ம் வருடமாக இருக்கலாம்.

2. நான் எனக்கு சொந்தமானது என்று சொல்லும் இடத்திற்கு சுற்றிலும் மகாவீர் பிளேன்டேஷன் நிறுவனத்திற்கு சொந்தமான இடங்கள் உள்ளது என்றால் சரியல்ல. இது பட்டா இடமாகும். தோடர் இனத்தவரின் இடமாகும். சம்பவ சமயத்தில் நானும், எனது மனைவியும் ஏழைகளின் நிலங்களை ஏமாற்றி வாங்கியதாக காவல் நிலையத்திலும், பசுமை தீர்ப்பாயத்திலும், வனத்துறையிலும் புகார்கள் கொடுக்கப்பட்டது என்றால் மகாவீர் பிளேன்டேஷன் நிறுவனத்தினர் தான் அந்த புகார்களை கொடுத்தனர்.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.13 18:14:41 +0530

3. அவர்கள் W.P.No.12517/2021 என்ற பொது நல வழக்கும் திரு.பிரபாகரன் என்பவர் மூலம் தாக்கல் செய்தனர். அதில் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் பசுமை தீர்ப்பாயத்தில் போடப்பட்ட வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் வெங்கடாச்சலம் மூலம் அ.வ.எண்.56/2022 தாக்கல் செய்தனர். அது நிலுவையில் உள்ளது. அதில் சமாதான பேச்சுவார்த்தையும் நடந்து கொண்டுள்ளது.

4. எனக்கும் மகாவீர் பிளேன்டேஷன் நிறுவனத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றால் அது வரையில்லை. அப்போது தான் ஆரம்பித்தது. இவ்வழக்கின் சாட்சிகளான பழனிச்சாமி, மகிமைராஜ், பார்த்தசாரதி மற்றும் சோமசேகர் ஆகியோர்கள் என்து தோட்டத்தில் வேலை பார்ப்பவர்கள் தான் என்றால் சரிதான். இந்த நால்வரைத் தவிர எதிரி எனது தோட்டத்திற்குள் வந்து பிரச்சனை செய்ததை பார்த்தவர்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள்.

5. எதிரி என்னை தகாத வார்த்தையால் பேசிய இடம் எனது இடம் என்று சொன்னாலும், அது பொது இடமில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி என்னை தகாத வார்த்தையால் திட்டியதால் தானும் பாதிக்கப்பட்டதாக வேறு நபர்கள் யாரேனும் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் எதிரி என்னை தான் திட்டினார். ஆங்கிலத்தில் திட்டினார். அங்கிருந்தவர்கள் படிக்காதவர்கள். நான் மட்டும் தான் படித்தவன்.

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.03.13 18:14:45 +0530

6. எதிரி எனக்கு கொலை மிரட்டல் கொடுத்த பின்பு அங்கிருந்தாரா என்றால் அல்லது சென்று விட்டாரா என்றால் JCB–யைக் கொண்டு வந்து தரைமட்டமாக்கிவிடுவதாக மிரட்டி விட்டு அவர் சென்று விட்டார். நான் அங்கு தான் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். எதிரி சாலையில் ஆணி அடித்துவிட்டதாக சொன்னதற்கு நான் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வேறு நபர் எதிரி மீது புகார் கொடுத்துள்ளார்.

7. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும். எதிரி சம்பவ இடத்திற்கு வரவில்லை என்று சொன்னாலும், எனக்கும் எதிரிக்கும் முன்விரோதம் காரணமாக வேலையாட்கள் மூலம் நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் அவர் தான் மிரட்டினார். அதனால் தான் புகார் கொடுத்தேன்.அங்கு தான் முதன் முதலாக பார்த்தேன். அது வரை அவரை எனக்குத் தெரியாது.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.13 18:14:51 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**